1971 ஜூலை 24]

இராமநாதபுரத்தில் மீன் உறைய வைக்கும் தொழிற்சாலை.

*425 வினா—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரத்தில் மீன் பதனிடும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) & (இ) இந்திய-நார்வே கூட்டுத்திட்டத்தின்கீழ், இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மண்டபத்தில் மீன் உறைய வைக்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையில் நாளொன்றுக்கு 8 முதல் 10 டன்கள் வரை மீன் உறையவைக்கும் திறனுடைய 'குளிர்காற்றை ஊதி உறைய வைக்கிற இயந்திரம்' (Blast Freezer) ஒன்றும், நாளொன்றுக்கு 1 டன் மீன் உறையவைக்கும் திறனுடைய 'குளிர் அறைத்தட்டுக்களில் உறையவைக்கும் இயந்திரம்' ஒன்றும் (Plate Freezer) உள்ளன.

Supply of mechanised boats to fishermen

*426 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the lots system is to be introduced in the grant of mechanised boats to fishermen; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: சட்டமன்றப் பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, கடலோரக் கிராமங்களிலுள்ள மீனவர்களுக்கு விசைப்படகுகள் வழங்கும் முறை கையாளப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, விசைப்படகுகள் கொடுப்பது கடலோரக் கிராமங்களிலுள்ள மீனவர்களுக்குத்தான். உள்நாட்டு மீனவர்களுக்கு அல்ல. பேரவையின்முன் வைக்கப்பட்டிருக்கும் விவர அறிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூர்ந்து கவனித்தால் தெரிந்து கொள்ளலாம். விசைப்படகுகள் கிடைக்காத கிராமங்களிலிருந்து விண்ணப்பங்கள் வந்து, விண்ணப்பதாரர்கள் யார் யார், அவர்கள் பயிற்சி பெற்றவர்களா, ஏற்கெனவே விசைப்படகு வாங்கியிருக்கிறார்களா என்பதையெல்லாம் கண்டறிந்து, பின்னர் விண்ணப்பதாரர்களின் பெயர்களை எழுதி, குலுக்குச் சீட்டு முறையிலே வருபவர்களுக்கு விசைப்படகுகள் தரப்படுகின்றன. கிடைக்காத கிராமங்களுக்கு நிச்சயமாகக் கொடுக்கப்படும்.

@ 450-ம் பக்கத்தில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.